**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**
முன்னிலை: திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**
2023 ம் ஆண்டு மார்ச் திங்கள் 09 ஆம் நாள் வியாழக்கிழமை
**இ.ம.எண்.3/2023 இன் அ.வ.எண்.332/2015**

சேகர் ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1) விஸ்வநாதன்
2) லோகநாதன்
3) சிவசுப்பிரமணியன்
4) முத்துச்சாமி
5) நடராஜ் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

6) S.தேவராஜ்
7) S.சிவராஜ்
8) S.அன்பழகன் ... எதிர்மனுதாரர்கள்/
உத்தேசபிரதிவாதிகள் 6 முதல் 8

இம்மனுவானது கடந்த 06.03.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.முரளி அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.K.மயில்சாமி அவர்கள் ஆஜராகியும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.மணிகண்டன் அவர்கள் ஆஜராகியும், 5ம் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாதரப்பினர் ஆக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

## ஆணையுரை

இம்மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு அசல் வழக்கில் திருத்தம் செய்திட உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VI விதி 17–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனு சங்கதியின் சுருக்கம்</u> :

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதியாவார். அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமும், இன்னபிற பரிகாரங்களும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அவசியதரப்பினர் என்பதால் தங்களை கட்சி சேர்க்க கோரி இ.ம.எண்.02/2022 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு கடந்த 27.01.2023 தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வழக்கில் கட்சிசேர்க்கும் பொறுட்டு வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி வழங்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2 முதல் 4 எதிர்மனுதாரர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சங்கதியின் சுருக்கம்</u> :

தாவா கோவிலுக்கும், மனுதாரருக்கும் யாதொரு தொடர்பும் கிடையாது. இந்நிலையில், ஒருமுறை வைத்து அதன்படி கோவில் வழிபாட்டினை நடத்தி வருவது போலவும், சுப்பைய தேவர் விட்டுச் சென்ற பாரம்பரியத்தை தொடர்ந்து நடத்தி வருவது போலவும் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் தவறாகும். மேலும், வாதி சேகர் அவர்கள் இவ்வழக்கில் திருத்தல் பிராது ஒன்று தாக்கல் செய்தார். அதன்பின்னிட்டு மேற்படி திருத்தல் பிராது குறித்து 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

3.2) மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையில் எதிர்மனுதாரர்/வாதி சேகரின் சகோதரர் ராஜு மற்றும் அகமுடைய சமூக முக்குந்தர் குலமக்கள் ஆகியோர் இவ்வழக்கில் அவசியதரப்பினர் என்று 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் குறிப்பிட்டிருந்த அடுத்த வாய்தாவிலேயே இம்மனுவை தாக்கல் செய்ததிலிருந்து எதிர்மனுதாரர்கள்/உத்தேச பிரதிவாதிகளும், வாதி/எதிர்மனுதாரரும் கூட்டுசேர்ந்தவர்கள் என்பது தெரியவருகிறது. மேலும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வாதியின்

தூண்டுதலின் பேரில் 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக கட்சிசேர்க்க இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே, இம்மனு எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

**4)** 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் தரப்பில் போதிய வாய்ப்பு வழங்கியும் எதிருரை எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. இரு தரப்பிலும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**6)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

**7)** **<u>பிரச்சினை</u>** :

மனு மற்றும் எதிருரையில் கண்டுள்ள சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அவசியதரப்பினர் என்பதால் தங்களை கட்சி சேர்க்க கோரி இ.ம.எண்.02/2022 தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனு கடந்த 27.01.2023 தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, 6 முதல் 8 எதிர்மனுதாரர்களை வழக்கில் கட்சிசேர்ப்பதை வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதி வழங்க கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8)** மனுவை பரிசீலனை செய்கையில் மனுதாரர் பரிகாரம் கோரியுள்ள கோவில் சொத்திற்கு உத்தேச பிரதிவாதிகளும் வாரிசுகள் என்பதால் அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே உத்தேச பிரதிவாதிகளை கட்சி சேர்க்க மனு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

**9)** இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எந்தவொரு பாதகமும் ஏற்படாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும், உத்தேச பிரதிவாதிகளை 6 முதல் 8 பிரதிவாதிகளாக வழக்குரையில் திருத்தம் செய்வதால் அசல் வழக்கின் தன்மை மற்றும் தரப்பினர்களின் உரிமைகள்

எதுவும் பாதிக்கப்படாது. எனவே, நீதியின் நலன்கருதியும், மனுதாரருக்கு நேரிய வழக்கு விசாரணைக்கு ஒரு வாய்ப்பு அளிக்கும் வகையிலும் அசல் வழக்குரையில் திருத்தம் செய்ய அனுமதியளித்து இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவில், இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்து பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (09.03.2023) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு</u>**
**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**அசல் / வரைவு ஆணையுரை**
இ.ம.எண்.03/2023 இன் ஓ.எஸ்.332/2015
நாள் : 09.03.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
பொள்ளாச்சி

---